[2016 ஜனவரி 23

41—

விளையாட்டரங்கம்

***47710—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராதாபுரம் தொகுதி, வள்ளியூரில் விளையாட்டரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ராதாபுரம் தொகுதி, வள்ளியூரில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தலில் சரித்திர சாதனை; பாராளுமன்றத் தேர்தலில் சரித்திர சாதனை புரிந்ததோடு வருகின்ற 2016 சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்று கின்னஸ் சாதனையைப் புரியவிருக்கின்ற தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எனது தொகுதியில், 217 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளும், 64 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இவற்றில் சுமார் ஒன்றரை இலட்சம் மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்கள் வருடந்தோறும் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று, வெற்றி பெற்று வருகின்றனர். இந்த ஆண்டுகூட, ஒரு மாணவன் மற்றும் இரண்டு மாணவிகள் தேசிய அளவில் வெற்றி பெற்று, வருகின்ற ஜூன் மாதம் 30 ஆம் தேதி தேசிய அளவிலான

2016 ஜனவரி 23]

போட்டிகளில் கலந்துகொள்ள இருக்கின்றனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில், வள்ளியூரில் ஒரு விளையாட்டரங்கம் அமைத்துத் தந்தால், ராதாபுரம் தொகுதி மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக மக்களே தன் மக்கள், தமிழர் நலனே தன் நலன்" என்று உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவியாக விளங்குகின்ற அம்மா அவர்கள் ஆட்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாநிலத் தலைநகரங்களிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருகின்றது. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் விளையாட்டு வளாகமும் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலங்குளம், கல்லிடைக்குறிச்சி, மேலப்பாளையம், சங்கரன்கோவில் ஆகிய பகுதிகளில் பல்வேறு உள் விளையாட்டு அரங்கங்களும் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் சரித்திர சாதனை படைக்கப்பட்டு வருகிறது.*

சரித்திர சாதனைகளை, கின்னஸ் சாதனைகளாக ஏற்படுத்தி வருகின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் கின்னஸ் சாதனை படைத்தார்கள். மார்பக புற்றுநோய் சிகிச்சைக்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் கின்னஸ் சாதனை படைக்கப்பட்டிருக்கின்றது.

வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் 234-க்கு 234-லும் வெற்றி பெற்று கின்னஸ் சாதனையைப் படைக்கவிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சாதனையாக ஆர்.கே. நகர் தொகுதியில் மாண்புமிகு அம்மா அவர்கள் 88 விழுக்காடு வாக்குகள் பெற்று வெற்றிச் சாதனையைப் படைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ராதாபுரம் தொகுதி, வள்ளியூரில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்குச் சொந்தமான நிலம் ஏதும் இல்லை. உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவோ அல்லது வருவாய்த் துறை

மூலமாகவோ இடத்தைத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்புகின்றபோது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ராதாபுரம் தொகுதி, வள்ளியூரில் விளையாட்டரங்கம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

42—

அடிப்படை வசதிகள்

***48096 திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், ஹைவேவிஸ் பேரூராட்சிப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது, எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகள் சுற்றுலாத் துறைமூலம் செய்யப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில், தேனி மாவட்டம், ஹைவேவிஸ் எஸ்டேட், மேகமலை பசுமையான தேயிலைத் தோட்டங்களையும், ஏலக்காய் எஸ்டேட்டுகளையும் கொண்டுள்ள பகுதி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதி சுற்றுலாத் தலமாக